# சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் LEED+ செயற்றிட்டமானது தனியார் துறையுடனான பங்காண்மையை சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடட் (CBL) மற்றும் அல்லி புட்ஸ் பிரைவட் லிமிடட் உடன் விஸ்தரிக்கிறது

## COVID-19 **காலப்பகுதியில் வாழ்வாதார வழிமுறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கலும் விநியோக சங்கிலிகளுக்கு வலுவூட்டலும்**

**நவம்பர் 04, 2020, கொழும்பு, இலங்கை:** சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளின் மூலமான உள்ளூர் மேம்பாடு (LEED+) செயற்றிட்டமானது, தனது மூலோபாயங்களின் ஒரு பகுதியாக, இலங்கையின் வடபகுதியில் பொருளாதார வளர்ச்சியை சீராக்குவதற்காக ''சந்தைப்படுத்தல் முறைமைகளின் அபிவிருத்தி'' என்னும் அணுகுமுறையின் மூலம் CBL மற்றும் Alli Foods தனியார் நிறுவனங்களுடன் பங்காண்மையை ஏற்படுத்துகிறது. மிகவும் பொருத்தமான தருணத்தில் ஏற்படுத்தப்படும் தனியார் துறையுடனான இந்த பங்காண்மையானது, COVID-19 நிலைமைகளால் பாதிப்புற்றிருக்கும் சர்வதேச மற்றும் உள்ளூர் விநியோக சங்கிலிகளுக்கு பதிலீடாக அமைவது மாத்திரமன்றி, தன்னிறைவை அடைவதற்காக குறிப்பிட்ட சில விவசாய உற்பத்திகளின் தேசிய உற்பத்தியை ஊக்குவிப்பதில் இலங்கை அரசாங்கம் செலுத்தும் அவதானத்திற்கும் ஒத்துழைப்பு நல்குவதாக அமைகிறது.

வேகமாக நகரும் பொருளாதாரத்தில் தனியார் கம்பனிகள் புதிய சந்தை வாய்ப்புகளை இனங்காண்பதில் தீவிரமாக செயற்பட முடியும். ஆனால் வட பிராந்தியத்தைப் பொறுத்தவரை இதனை மிகவும் அரிதாகவே காணக் கூடியதாகவுள்ளது. தேவையான திறன்கள், சந்தை தகவல்கள் அத்தோடு உள்ளூர் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகங்களுக்கு பொருத்தமான நிதியினை பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகள் இல்லாமை போன்ற காரணங்களினால் இவ்வாறான தனியார்துறை பங்காண்மை தொடர்ந்தும் அதிக ஆபத்தான நடவடிக்கையாகவே கருதப்படுகிறது. அதனால் தேசிய ரீதியில் மிகப்பெரிய நிறுவனங்களின் முதலீடுகள் தடுக்கப்படுகின்றன. இருப்பினும், தனியார் துறைக்கு ஒத்துழைப்பு வழங்கும் விதமாக, பகிரப்பட்ட இழப்பீட்டு அபாயத்தின் ஊடாக இந்த இடைவெளிகளை வணிக ரீதியாக சாத்தியமான முறையில் தீர்ப்பதற்கு LEED+ செயற்றிட்டம் உதவுகின்றது. இதன் விளைவாக வணிகங்களுக்கும் உள்ளூர் சமூகங்களுக்கும் இணைந்த நன்மை பயக்கும் வெற்றிகரமான ஒரு முன்மொழிவாக அமைகிறது.

உள்ளூர் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான இத்திட்டத்தின் துறைசார்ந்த அணுகுமுறையானது தற்பொழுது விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைகளில் கவனம் செலுத்துகிறது. குறிப்பாக மூன்று பெறுமதிச் சங்கிலிகள் - நிலக்கடலை, தேங்காய் தும்புசார் உற்பத்திகள் மற்றும் கடலட்டை ஆகிய உற்பத்திகளிற்கு டேவிட் கிராம், குயி-லான், ஹேலீஸ் மற்றும் ரொப்பிகொயர் லங்கா ஆகிய கம்பனிகளுடன் வெற்றிகரமான பங்காண்மையை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்தியுள்ளது. CBL மற்றும் அல்லி கம்பனிகளுடன் இத்திட்டத்தின் புதிய பங்காண்மையானது இரண்டு புதிய பெறுமதிச் சங்கிலிகளான சோளம் மற்றும் உழுந்து ஆகிய பயிர் வகைகளுக்காக

ஏற்படுத்தப்படுகிறது. LEED+ இனால் பரந்துபட்ட அளவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் இவ்விரு பயிர்வகைகளும் உள்ளூர் சமூகத்தினருக்கு, விசேடமாக பெண்கள் தொடர்பாக வேலைவாய்ப்புகளையும் வருமானத்தையும் ஈட்டித்தருவதற்கு குறிப்பிடத்தக்க சாத்தியங்களைக் கொண்டிருப்பது தெரிய வந்துள்ளது.

இப்பங்காண்மை தொடர்பாக CBL நிறுவனத்தின் விவசாய வணிக அபிவிருத்திப் பணிப்பாளர் கலாநிதி ருக்ஷான் குணதிலக்க அவர்கள், ‘‘இத்திட்டத்தின் மூலம் வடமாகாண விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் நிலையான வழங்கல்களை உறுதிப்படுத்தவும் சர்வதேச தொழிலாளர் தாபனத்துடன் பங்காளராக இணைந்துகொள்வது எமக்கு கிடைத்த கௌரவம் ஆகும். மேலும், வடமாகண விவசாயிகளுக்கு தனியார் துறையின் ஒத்துழைப்புகளை வழங்குதல் மற்றும் சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் உலகார்ந்த நிபுணத்துவத்துடன் கூடிய வழிகாட்டுதல்களை பெற்றுத்தரல் என்பன இலங்கையில் உணவுப்பொருள் விநியோகச் சங்கிலிகளை பலப்படுத்துவதாக அமையும். அத்தோடு, வடமாகாணத்தில் விவசாயத்துறையின் பொருளாதார பங்களிப்பை அதிகரிக்க உதவுவதோடு, CBL கம்பனியானது உள்நாட்டில் விளைந்த தரமான விவசாய உற்பத்திகளை தொடர்ந்து கொள்வனவு செய்வதற்கும் ஒத்துழைப்பு வழங்குவதாக அமையும்’’ என்று குறிப்பிட்டார்.

அல்லி கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. இலீன் றிலுவான் அவர்கள் குறிப்பிடும்போது, ‘‘COVID-19 நிலைமைகளின் காரணத்தால் விவசாய உற்பத்திப் மூலப்பொருட்களின் இறக்குமதி ஊக்குவிக்கப்படவில்லை. மேலும், விநியோக சங்கிலிகள் பாதிக்கப்பட்டதால் எமது கொள்வனவு முறைமையும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருந்த சந்தர்ப்பத்தில், இந்த பங்கான்மையானது மிகச் சரியான தீர்வை ஏற்படுத்த விழைகிறது. இவ் வணிக மாதிரியானது கம்பனியும் விவசாய உற்பத்தியாளர்களும் தொடர்ச்சியாக நலன்களைப் பெற்றுக்கொள்ளும் விதமான வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது. விவசாய சமூகத்தினரை தனியார் கம்பனிகளுடன் இணைப்பதன் மூலம் தரகர்களின் சுரண்டல்களிலிருந்து விவசாயிகள் பாதுகாக்கப்படுவதோடு அவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் மேற்கொண்டு விவசாயத்தில் ஈடுபடுவதற்கும் அதிகளவு விளைச்சலையும் உகந்த நியாய விலைகளையும் பெற்றுக்கொள்வதற்கும் ஏதுவாக அமைகிறது. மேலும் வடமாகாண விவசாயிகளின் அபிவிருத்திக்கு நவீன விவசாய அறிவு சார்ந்த தகவல் பரிமாற்றம் மிகச் சிறந்த வளமாகும். அது அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பெரும் பங்காற்றும்’’ எனக் குறிப்பிட்டார்.

LEED+ செயற்றிட்ட அணுகுமுறை பற்றி குறிப்பிட்ட சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் இலங்கை மற்றும் மாலை தீவுகளுக்கான பணிப்பாளர் திருமதி சிம்ரின் சிங் அவர்கள், ‘‘சந்தைப்படுத்தல் முறைமைகளின் அபிவிருத்தியில் அவதானம் செலுத்துவது குறுகியகால வெற்றிவாய்ப்பையும் மிக முக்கியமாக நீண்டகால தீர்வுகளையும் பெற்றுக் கொடுக்கக்கூடியது. இந்த அணுகுமுறையானது வடமாகாண உற்பத்தியாளர்களுக்கும் தனியார் துறையினருக்கும் இடையில் இணைப்பினை ஏற்படுத்துகிறது. அத்துடன் ஏற்படுத்தப்படும் தொழில் வாய்ப்புகள்

மற்றும் வாழ்வாதாரங்கள் நிலைபேறானவை என்பதையும் உறுதி செய்கிறது. இதற்கான சூழற்தொகுதியொன்றை ஆதரவளிக்கும் சேவைகள், அறிவுசார் தகவல்களும் உள்ளீடுகளும், சந்தை இணைப்புகளைக் கொண்டு உருவாக்கும்போது, சர்வதேச தொழிலாளர் தாபனம் இத்தொடர்பில் இருந்து விலகிக்கொண்டாலும் இந்த கௌரவமான வேலைவாய்ப்புகள் தொடர்ந்து நிலைத்திருக்கும்'' என்று குறிப்பிட்டார்.

சமூகங்களுடன் வணிகங்களை இணைக்கும் வாய்ப்புகளை எளிதாக்குதல் மற்றும் உருவாக்குதல் மூலமாக வளர்ச்சியின் நலன்களை அனைவரோடும் பகிர்ந்து கொள்வதிலும், அத்துடன் அனைவரும் முன்னோக்கிச் செல்வதற்காக உச்ச ஒத்துழைப்பை பெற்றுத்தரும் வழிவகைகளை கட்டியெழுப்புவதிலும் LEED+ பங்கான்மைகள் வேரூன்றியுள்ளன.

*அவுஸ்திரேலிய அரசாங்க வெளியுறவு மற்றும் வர்த்தகத் துறை (DFAT) மற்றும் நோர்வே அரசாங்கத்தால் நிதிவழங்கப்படும் LEED+ திட்டமானது, ILO வின் சமாதானம் மற்றும் மீளெழுச்சிக்கான உலகளாவிய வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாகும். அதன் ஆதார மையமாக, LEED+ என்பது ILO வின் ஒரு மிகச்சிறந்த முயற்சியாகவும், கௌவரமான, உள்வாங்கலுடன் கூடிய மற்றும் நிலைபேறான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும், செயன்முறையின்போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களை வலுவூட்டுவதை உறுதி செய்வதையும் கொண்டமைந்துள்ளது.*